# திருவாடுதுறை ஆதீனத்து மஹாவித்வான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் பிரபந்தத்திரட்டு - பகுதி **10 (1049)** திருவாவடுதுரை ஆதீனத்துக் குருபரம்பரையகவல்

# **Tiriciripuram makAvitvAn mInATci cuntaram piLLaiyin pirapantat tiraTTu - part 10 (verse 1049) tiruvAvaTuturai AtInattuk kuruparamparai akaval In tamil script, unicode/utf-8 format**

**Acknowledgements:**

Our Sincere thanks go to Dr. Thomas Malten and Colleagues of the Univ. of Koeln, Germany for providing us with the transliterated/romanized version of the etext and giving us permission
to release the TSCII version as part of Project Madurai etext collections.
Etext preparation and proof-reading: This etext was produced through Distributed Proof-

reading approach
and following persons helped in the preparation and proof-reading of the etext:
S. Anbumani, Kumar Mallikarjunan, V. Devarajan, Subra Mayilvahanan, S. Karthikeyan and Vijayalakshmi Peripoilan
Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

© Project Madurai, 1998-2006 .
Project Madurai is an open, voluntary, worldwide initiative

devoted to preparation
of electronic texts of tamil
literary works and to distribute
them free on the Internet.
Details of Project Madurai are
available at the website
**http://www.projectmadurai.org/**
You are welcome to freely
distribute this file, provided this
header page is kept intact.

---

திருவாடுதுறை ஆதீனத்து
மஹாவித்வான்
திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்
பிள்ளையவர்களின்
பிரபந்தத்திரட்டு - பகுதி **10 (1049)**

# திருவாவடுதுரை ஆதீனத்துக் குருபரம்பரையகவல்.

1049 திருவளர் கைலைச்
சிலம்பில்வீற் றிருக்கு
மருவளர் கடுக்கை
மாலிகைப் பெருமா
னருள்பெறு நந்தி யடிகடம்
பான்மெய்ப்
பொருள்பெறு கருணைப்
புகழ்ச்சனற் குமாரர்
மற்றவ ரருளுறீஇ வையகத்
தியங்கிய
நற்றவர் சத்திய ஞானதரி
சனிக
ளவந்தெறு மன்னவ
ரருளொருங் குற்றுப்

பவந்தெறு வாய்மைப்
பரஞ்சோதி யடிக
ளத்தகு குரவ ரருளடைந்
துயர்ந்த
வித்தகர் வெண்ணெய்
மெய்கண்ட தேவ
ரிவர்முதற் குரவ
ரியைந்ததிரு நாமந்
தவர்புகழ் சமாதித் தலமடை
மதிநா
ளிவைமுறை யுரைப்பா
மிசைத்தமெய் கண்டர்
சுவையமை வெண்ணெய்
துலாமதி சோதி
தவலருங் கருணை
தழையரு ணந்தியார்
கவலருந் துறையூர்

கன்னிமதி பூரம்
படர்மறை ஞானசம்
பந்தர்வண் டில்லை
வடகளாச் சேரி
மடங்கன்மதி யுத்தரந்
திக்கொத் திறைஞ்சத்
திகழுமா பதியார்
மெய்க்கொற் றவன்குடி
மேடமதி யத்தம்
வாய்ந்தவரு ணமச்சி
வாயதே சிகர்மேல்
வேய்ந்தகொற் றவன்குடி
வின்மதி யாதிரை
திண்ணிய சித்தர் சிவப்பிர
காசர்
நண்ணிய தலமதி நாளவர்க்
கில்லை

யளவா வருளுற் றவிர்நமச்
சிவாயர்
வளவா வடுதுறை மகரமதி
முதனா
ணலமலி தருமறை
ஞானர்மே லுரைத்த
வலமலி துறைசை மகரமதி
சோதி
வளம்பயி லம்பல வாணர்
மேலெடுத்து
விளம்பிய துறைசை
மேடமதி யவிட்ட
மொருவா வருண்மலி
யுருத்திர கோடிக
டிருவால வாய்விருச்
சிகமதி யனுட
மணவிய வருள்வே லப்பர்

திருப்பூ
வணநகர் விருச்சிக
மதியுத்த ராடந்
தரமலி குமார சாமிகள்
சுசீந்திரம்
வரமலி விருச்சிக மதியுத்த
ராடந்
தரைசொல்பிற் குமார
சாமிகள் சுசீந்திர
முரைமடங் கன்மதி
யுத்தரட் டாதி
மருவுமெய்ஞ் ஞான
மாசிலா மணியார்
வெருவில்வெண் காடு
மேடமதி யுரோகிணி
யிராம லிங்கர்மு
னிசைத்தகோ முத்தி

பராவு விருச்சிகம் படர்மதி
யனுடந்
தாவில்வே லப்பர் சங்கர
நயினார்
கோவில்வான் கன்னி
குலாமதி மூலம்
பின்வே லப்பர்
பெருந்துறை கோட்டிற்
பொன்வேய் சேமதி பூரட்
டாதி
யாய்புகழ்த் திருச்சிற்
றம்பல தேசிகர்
வேய்புகழ்த் துறைசை
மிதுனமதி பரணி
யம்பல வாண ராவடு
துறையே

நம்பலர் கொடுஞ்சிலை
நகுமதி கேட்டை
வளமலி சுப்பிர மணிய
தேசிக
ரளவரும் புகழ்த்திரு
வாவடு துறையே
தெளிதர வொளிர்விருச்
சிகமதி கார்த்திகை
வெளிதர வுரைத்தேன்
வேணவா வானே. 55

குருபரம்பரையகவல் முற்றிற்று

---

This page was last updated on 30 March 2006.
Please send your comments and

corrections to the webmaster.